**சக்தி பௌண்டேஷன் - தமிழ் CAC வகுப்பு**

**Uni5 பக்த விஜயம் - 40. ஸ்ரீநீளா பிம்பளாஜி [அபங்கம் பாடிய அடியார்களுள் ஒருவர்]**

---

பிம்பளா நகரம் வடதேசத்தில் உள்ளது.அபங்கத்தில் குறிக்கப்படும் இடம் இது.காரணம் மிகத் தூய எளிய பக்தர் ஸ்ரீநீளாஜியின் வாழ்க்கை தான்.

உண்மையான பக்திக்கு இறைவன் எதையும் எப்படியும் செய்வான்.அவர்களின் ஒரே உண்மையான துணைவன் இவன் தான்.இதை உணர்த்தும் அன்பர் இவர்."திக்கற்றவர்களுக்கு தெய்வமே துணை" என்ற பழமொழிக்கு இவரும் ஓர் உதாரணம் ஆகிறார்.

இவரது வாழ்க்கையை சமீபத்தில் நம் காலத்தில் வாழ்ந்த ஒரு இசை ஆசிரியரின் வாழ்க்கையுடன் ஒப்பிடுகிறோம். அவரது பெயர் முசிறி ஸ்ரீகோபால் ரத்னம். இவர் ஐம்பது அறுபதுகளில் திருச்சியில் வாழ்ந்த மிக அருமையான ஆனால் எளிய இசை ஆசிரியர்.தூய ராம பக்தர். அதை விட நாத ப்ரஹ்மம் த்யாகராஜர் மீது அதீத பக்தியும் மரியாதையும் கொண்டவர்.இவர் மக்கள் தங்களால் தரும் தக்ஷிணையை ஏற்றுக் கொள்வார்.தானாக எதையும் கேட்டுப் பெற மாட்டார்.அவருக்கு ஐந்து பெண்கள்.

த்யாகராஜர் வாழ்ந்த கொள்கையின் வழியில் மிக எளிமையாக வாழ்ந்தார், உண்மையான பக்தியை சங்கீதத்துடன் மாணவர்களுக்குக் கற்றுத் தருவார்.தன் குழந்தைகளை எப்படிக் கல்யாணம் செய்து வைக்கப் போகிறோம் என்ற கவலையே இன்றி பூரண சரணாகதியைப் பின்பற்றினார்.

உண்மையான வித்யையும் சங்கீத உபாசனையும் குரு பக்தியும் அவரது ஐந்து பெண்களுக்கு ஐந்து வித நல்ல வரன்களைத் தேடித் தந்தது.ஒரு பைசா வரதக்ஷிணை இன்றி அவர்களைக் கல்யாணம் செய்து கொண்டனர் மாப்பிளைகள்.

இதே போன்ற மிக உயர்ந்த பக்தியில் வாழ்ந்தவர் தான் நீளாஜி.அபங்கம் பாடி மக்களுக்கு ஆன்மீகப் பற்றை ஊட்டினார்.த்யாகையர் போல் தினமும் உஞ்சவ்ருத்தி செய்து அதில் வரும் பொருளைக் கொண்டு குடும்பத்தைப் பராமரித்தும் பாகவதக் கைங்கர்யமும் மேற்கொண்டார்.அவருக்கு ஒரே பெண்.அவளைக் கரை சேர்க்கும் கல்யாணக் கவலையிலேயே இவர் மனைவி நொந்து போனார்.இவரோ எதையும் பற்றி அலட்டிக் கொள்வதில்லை.

இவரது அபங்கத்தால் உயர்ந்த ஆன்மீகப் பரிணாமத்தை அடைந்துவரும் ஒரு குடும்பம் இவரது மகளைக் கல்யாணம் செய்து கொள்ள நிச்சயம் செய்து விட்டது.இவர் அமைதியாகப் பாண்டுரங்க லீலையை கவனித்துக் கொண்டு இருந்தார்.

**பண்டரீபுர சமையல்காரர்**

கல்யாணத்துக்கு சில நாட்கள் இருந்தன. ஒரு வயதான அன்பர் வீடு தேடி வந்தார்.அவர் தன்னிடம் உள்ள பொருட்களை இவருக்கு அளித்து அதைச் சமைத்துத் தரும் படி வேண்டினார். அதற்கு நீளாஜி, "பாகவத அன்பரே! உமக்கு அடியேனின் யாசகப் பொருள் கொண்டு அன்னம் இடுவதே உயர்ந்தது" என்றார்.இருப்பினும் அன்பின் காரணமாக அவர் அளித்த சில உணவுப் பண்டங்களைச் சரக்கு அறைக்குள் வைத்துக் கொள்கிறார்.

வயதானவர் கூறினார், "**நீளாஜி! அடியேன் பண்டரீபுர ஏகாதசி த்வாதசி அன்னதானம் செய்வதில் மிகவும் அனுபவம் கொண்டவன்.நயா பைசா கூலி வேண்டாம். உன் மகளின் கல்யாணத்துக்குச் சமையல் செய்யும் பொறுப்பை எமக்குத் தருக**!" என்று வேண்டிட தம்பதியினர் பண்டரீபுர சம்பந்தம் பெற்ற மகிழ்ச்சியில் மகிழ்ந்தனர்.

ஒரு புறம் கல்யாணம், மறுபுறம் நீளாஜியின் அபங்க பஜனை. ஊரே கூடிக் கல்யாணத்தைக் கண்டது.குடிசையின் பின்னால் பந்தலின் கீழ் மணக்க மணக்க சமையலை கவனித்தார் வயதான அன்பர்.வந்தோர் அனைவருக்கு வயிறார உணவு அளித்த நீளா, மகளையும் மறுவீடு அனுப்பிவிட்டு சமையலுக்கு தக்ஷிணையாய் ஒரு பட்டு வேட்டியைக் கொண்டு வந்து சமையல்காரரைத் தேட அவர் அங்கே இல்லை. [இதே போன்ற லீலைகளை வள்ளலார், பாம்பன் ஸ்வாமிகள் போன்றோர் செய்தனர்]

பாண்டுரங்கனின் அருளை உணர்ந்து, சில நாட்களில் பண்டரீபுரம் சென்றனர் நீளா தம்பதியினர்.அப்போது பூஜாரி கூறினார், "**ஐயா உங்கள் மகள் கல்யாணத்துக்கு வர முடியவில்லை.அதனால் என்ன அன்று முழுவதும் மூலஸ்தானத்தில் சமையல் மணம் கமழ்ந்ததே**!"

ஹரி ஓம்!